# ஆனையிறவுபடையினருக்கு புலிகள் தொடர்ந்தும் நெருக்கடி !


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | ஆடி 25 | இதழ்: 180
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 10-8-1991


(லண்டன்)
இலங்கையின் வடபகுதியிலுள்ள ஆனையிறவு முகாமிலுள்ள சிறிலங்கா படையினருக்கு விடுதலைப் புலிகள்
(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் அசையமுடியாத நிலையிலிருக்கிறது

[லண்டன்]
இராணுவத்தினர்மீது நாம் தொடர்ந்து நடாத்தும் கடும் தாக்குதலால் இராணுவத்தினர் ஆனையிறவுப் பகுதியிலிருந்து அசையமுடியாத நிலையிலிருப்பதாக விடுதலைப் புலிகள்
(4-ம் பக்கம் பார்க்க)

## மோதல் தொடர்கிறது இராணுவ அதிகாரி தகவல்

(மணிலா)
இலங்கையின் ஆனையிறவுப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் தொடர்ந்தும் சண்டை நடைபெற்றுவருவதாக இலங்கை இராணுவ அதிகாரி ஒருவர் நேற்று கொழும்பில் தெரிவித்துள்ளார்.
[4-ம் பக்கம் பார்க்க]

## வடக்கு கிழக்கு பகுதிகளுக்கான

# யுத்த நிறுத்தப் பிரேரணையை நாடாளுமன்றம் நிராகரித்தது!

[மணிலா]

**இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் யுத்த நிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்படவேண்டுமென்று இடதுசாரிக்கட்சி அங்கத்தவர் சமர்ப்பித்த பிரேரணை நாடாளுமன்றத்தினுல் நிராகரிக்கப்பட்டது.**

இனப்பிரச்னை தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிப்பது தொடர்பான தீர்மானம் ஒன்று நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தெரிவுக்குழுவில் 12 அங்கத்தவர்கள் இடம்பெறுவர் என்றும், அவர்கள் பெயர்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் இந்தத்தெரிவுக்குழுவை நியமிப்பதற்குமுன் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் யுத்த நிறுத்தம் ஒன்றை அமுல்படுத்தவேண்டும்என்று இடசாரிக்கட்சியைச் சேர்ந்தஅங்கத்தவர் நேற்று நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்தார்.

அந்தப் பிரேரணையை நாடாளுமன்றம் நிராகரித்தது.

## இனப்பிரச்னை தீர்வுக்கான நாடாளுமன்ற தெரிவுக் குழு பிரேரணை நிறைவேறியது

[கொழும்பு]
இனப் பிரச்னை தீர்வுக்குரிய வழிவகைகள் குறித்து ஆராயும்முகமாக நாடாளுமன்ற தெரிவுக்குழு நியமிப்பது சம்பந்தமான பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மேற்படி பிரேரணையை ஸ்ரீ ல. சு. கட்சி உறுப்பினர் திரு. மங்கள முனசிங்கா நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்தார்.

தெரிவுக்குழு அமைப்பது தொடர்பாக நாடாளுமன்ற சபாநாயகர் எம். எச். முகம்மது எதிர்க்கட்சி உறுப்பினர்களுடனும் பேச்சுவார்த்தை
[4-ம் பக்கம் பார்க்க]

## பாஸ்வழங்கும் அலுவலகம் இன்று முதல் இயங்கும்

[யாழ்ப்பாணம்]
வடபகுதியிலிருந்துவெளியே செல்வோருக்கு அனுமதி வழங்கும் சகல காரியாலயங்களும் இன்றுமுதல் இயங்கத்தொடங்குமென்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின்போக்குவரத்து கண்காணிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

வடபகுதிக்கு வெளியே செல்வோருக்கு அனுமதி வழங்கு
(4ம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோதமாக இயங்கிய 'வைன் ஸ்பிறிற்' தொழிற்சாலை பொலிஸாரால் கண்டுபிடிப்பு

(கொழும்பு)
சட்டவிரோதமாக வைன் ஸ்பிறிற் தயாரிக்கும் தொழிற்சாலையொன்று பொலிஸாரால் நேற்று முன்தினம் சோதனையி
(4-ம் பக்கம் பார்க்க)

## 42 ஆயிரம் ரூபா வருமானத்துக்கு வரி அறவிடும்படி சிபார்சு!

(கொழும்பு)
வருடாந்தம் 27 ஆயிரம் ரூபா வருமானத்துக்கு அறவிடப்படும் வரியை இனிமேல் 42,000 ரூபா வருடவருமானத்துக்கு அறவிடும்படி அரசாங்கத்துக்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

வரி ஆணைக்குழு வெளியிட்டிருக்கும் அதன் காலாண்டு
(4ம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடா நாட்டில் புலிகள் பாதுகாப்பு நிலைகளை பலப்படுத்துகின்றனர்!

(லண்டன்)
தமிழீழ விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள யாழ். குடாநாட்டுப் பகுதியில் தமது நிலைகளைப் பலப்படுத்துவதில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுவருவதாக இலங்கை இராணுவ புலனாய்வுசெய்திகள் தெரிவித்ததாக பி. பி. ஸி. நேற்றைய ஒலிபரப்பில் தெரிவித்தது.

பி. பி. ஸி. மேலும் தெரிவிக்கையில்: ஆனையிறவு இரா
[4ம் பக்கம் பார்க்க]

## 6 படையினர் பலி

[கொழும்பு]
ஆனையிறவு இராணுவ முகாமிற்கு தெற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் மீண்டும் இராணுவத்தினருக்கும் விடுத
(4ம் பக்கம் பார்க்க)

## 7 விவசாயிகள் கொலை

(கொழும்பு)
சம்மாந்துறையில் நேற்று முன்தினம் இனம் தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலில் 7 விவசாயிகள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆயுதம்தாங்கிய கோஷ்டி ஒன்று இத்தாக்குதலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## சந்திரசேகரம் கைது பற்றி நாடாளுமன்றில் கேள்வி

[கொழும்பு]
மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரம் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

நவ சமசமாஜக்கட்சித் தலைவர் திரு வாசுதேவ நாணயக்காரா இதுதொடர்பான கேள்வியை எழுப்பினர்.

சந்திரசேகரத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருப்பதாகவும் அதுதொடர்பான விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் இக்கேள்வியின்போது தெரிவிக்கப்பட்டது.

## தனியார் கல்வி நிலையங்கள் இன்று முதல் இயங்கும்

[யாழ்ப்பாணம்]
இன்று சனிக்கிழமை யாழ். மாவட்டத்தில் தனியார் கல்வி நிலையங்கள் இயங்கத் தொடங்கும்

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் நிழல் நிர்வாக கல்விப் பொறுப்பாளர் அருண் மாஸ்டர் நேற்று யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தனியார் கல்வி
(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு மோதல் வீடியோ மூலம் தென்பகுதியில் காண்பிப்பு

[கொழும்பு]
தமிழீழ விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்ட ஆனையிறவு இராணுவமுகாமை மீட்பதில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய வீடியோ படங்கள் தற்பொழுது கொழும்பின் பலபகுதிகளிலும் காட்டப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.
[4-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

க. பொ. த. சித்திரப்பாடத்தில் சிறப்புச் சித்தி பெறுவதற்குச் சித்திரம் வினாவிடை கிடைக்குமிடங்கள் அரன்ஸ், சிவாஸ், வாலாம்பிகா, ஸ்ரீலங்கா, ஆல் சிலோன், பூபாலசிங்கம், மண்டேலா, மாக்மிலன், தினேஸ் ஆகிய கடைகளில் கிடைக்கும். [சி–5092]

## புதிய மீரா நாவல்

''முடிவல்ல ஆரம்பம், இருள் இரவில் அல்ல'' நாவல்களை ரசித்துப் படித்த வாசகர்களுக்கு! இந்நாவல்களை எழுதிய 'சிதம்பர திருச்செந்திநாதன்' எழுதிய இன்னொரு வித்தியாசமான புதியசமூகநாவல் ''முள்முடி மன்னர்கள்'' விற்பனையாகின்றது. (சி 5087)

## ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும், ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும், உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். தொடர்பு நேரில். சனி, ஞாயிறு காலை 11-00—12-00 மணி. S. ஜெயராசா, 204, மானிப்பாய் றேட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம் (சி4962)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## மருத்துவபீடம்

### (இறுதியாண்டுப் பரீட்சை - 1991)

16-09-1991இல் நடைபெறவிருந்த மருத்துவபீட இறுதியாண்டுப் பரீட்சை பின்போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்

பதிவாளர்

(ஏ-1486)

## தரன் ஸ்ருடியோ

பாஸ்போர்ட், அடையாள அட்டை - என்லாஜ்மென்ட், கலர்ப்படங்களுக்கும், றபர் சீல்கள், விளம்பர போட்கள், பிளாஸ்ரிக், ஸ்ரிக்கர்கள், டிசைன்கள் ஓவிய வேலைகட்கு தரன் படப்பிடிப்பாளர், 189, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-5065)

## ஊன்று கோல்களை ஒப்படைக்க கோரிக்கை

[வடமராட்சி]

ஊன்று கோல்களைத்திரும்ப ஒப்படைக்குமாறு மந்திகை வைத்தியசாலையில் இயங்கிவரும் புனர்வாழ்வு நிறுவனம் உதவி ஊன்றுகோள்கள் பெற்றவர்களிடம் கோரியுள்ளது.

ஏற்கனவே மேற்படி நிறுவனத்தின் உதவிபெற்று தற்காலிகமாக ஊன்று கோல்களைப் பெற்றுச்சென்ற பாதிப்புற்றவர்களை ஏனையோருக்கு உதவுமுகமாக ஊன்றுகோல்களை ஒப்படைக்குமாறு கேட்டுள்ளார்கள். [51]

## விஞ்ஞான நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

கல்லூரி மாணவர்களிடம் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் நோக்கமாக யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களிடையே ஒரு விஞ்ஞான நிகழ்ச்சியை நடாத்தவுள்ளது.

இவ்வைபவம் செப்ரெம்பர் மாதம் 29ம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (152)

## விசேட அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

களத்தில் நின்று போராடும் இளைஞர்களினது நலன் வேண்டியும், காயமடைந்த போராளிகள் சுகப்பேறு கேட்டும், போராட்டம் வெற்றியடையவும், வீரமரணமடைந்த மாவீரர்களின் ஆத்மசாந்தி வேண்டியும் விசேட அபிஷேகமும் கூட்டுப்பிரார்த்தனையும் குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையமும், இடம்பெயர்ந்த குரும்பசிட்டி மக்கள் சார்பாகவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9–00 மணிக்கு ஏழாலை களவோடை அம்மன் ஆலயத்தில் நடைபெறஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## சேவைக்கால பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 15ம் திகதி வியாழக்கிழமை சேவைககால பயிற்சி வகுப்பு நடைபெறும்.

சாவகச்சேரி கோட்டத்தைச் சேர்ந்த சகல மனைப்பொருளியல் ஆசிரியர்களும் தவறுது சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## கடவுச்சீட்டு விண்ணப்பம்

(மானிப்பாய்)

யாழ். செயலக புத்தகசாலையில் தினமும் ஐம்பதுக்கு மேற்பட்ட கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.

இப்படிவங்களில் உரியவர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிக்கப்பட்டு இலவசமாகவழங்கப்படுகிறது. (71)

## வருடாந்த உற்சவம்

(மானிப்பாய்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 13ம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறும் இவ் உற்சவத்தின் பதினோராம் நாளான 23ந் திகதி வெள்ளி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (71)

★

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கதிர்காம ஆலய உற்சவம் இம்மாதம் 15ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 23-ம் திகதி ரதோற்சவமும் 24-ம் திகதி தீர்த்தோற்சவத்துடனும் மஹோற்சவம் நிறைவுபெறும்.

புங்குடுதீவில் புராதன பெருமைவாய்ந்த கோவில் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## இராசி பலன்

10 - 08 - 1991

சனிக்கிழமை

அமாவாசை மு. ப. 8–47 வரை, ஆயிலியம் மு. இ: 8–47 வரை, மரணயோகம், இராகு காலம் காலை 9–04 முதல் 10-34 வரை, சுபநேரம் மாலை 3-04 முதல் 4–34 வரை. தமிழுக்கு ஆடி 25.

மேடம்: நயவஞ்சகத்தனம், குடும்பகலகம், கண்துடைப்பு.

இடபம்: தொழில் கஷ்டம், குடும்பசுகம், தானதர்மம்,

மிதுனம்: அஞ்ஞானவாசம், பகைவரி துன்பம், பணக்கஷ்டம்.

கடகம்; புதிய முயற்சி, பொருள் வரவு, மகிழ்ச்சி பிரவாகம்.

சிங்கம்: மனவெறுப்பு, நண்பர் விரோதம், பயணகளைப்பு.

கன்னி: தொழில் சிறப்பு, கடும் உழைப்பு, குடும்பசுகம்.

துலாம்: வாய்த் தர்க்கம், தொழில் மாற்றம்; விருந்துபசாரம்.

விருச்சிகம்: படபடப்பு, மனச்சஞ்சலம், தொழில் பிணக்கு.

தனுசு: மந்த நிலை, மனப் போராட்டம், இனசனப்பகை.

மகரம்: குடும்பத்தில் கலகலப்பு, சுபசெய்தி, பண வரவு.

கும்பம்: உடல் ஆரோக்கியம், குடும்ப மகிழ்ச்சி, புதிய உறவு.

மீனம்: அவமதிப்பு, தொழில் போராட்டம், மனக்குமுறல்.

- ஜோஸ்யர்

# "மக்களின் பங்களிப்பு அதிக அளவில் தேவை"

(உடுவில்)

''தமிழன் ஒருபோதும் ஒழித்துவாழ்ந்தவனல்லன். பயந்து வாழ்ந்தவனுமல்லன், தன்மானத்துடன் மொழி, இன, தேசப்பற்றுடன் வீரமுடன் எதிரியை எதிர்கொண்டு போரிட்டவன். அத்தகைய சிறப்புவாய்ந்த தமிழன் இன்றும் தன்மான உணர்வுடன் வீரமுடன் எதிரியை எதிர்கொண்டு வருகின்றான். மண் மீட்புப் போரில் நாம் ஒதுங்கி வாழ்ந்தால் எதிரி எம் இனத்தையே அழித்துவிடுவான். இந்த மண் எமது சொந்த மண். எமது சொந்த மண்ணை மறந்து நாம் வாழ முடியாது''.

கோண்டாவில் மக்கள் முன்னணி அலுவலகத்தில் நடைபெற்ற கிராமமட்டத்திலான ஸ்தாபனங்களின் போர்க்கால கலந்துரையாடல் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் அரசியல் பொறுப்பாளர் திரு. மூர்த்தி இவ்வாறு கூறினார்.

சனசமூகநிலையங்கள், மகளிர் முன்னணி அமைப்புக்கள் இளைஞர் கழகங்கள், விளையாட்டு கழகங்கள், விவசாயிகள் போன்ற பல்வேறு மட்ட ஸ்தாபனங்களின் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

திரு. மூர்த்தி மேலும் கூறியதாவது;- இன்று களத்தில் நின்று போராடிக்கொண்டிருக்கும் போராளிகளுக்கு உதவியாக நின்று செயற்பட பெரிய அளவில் உதவியாளர்கள் தேவைப்படுகின்றனர். இன்றையகாலத்தில்தான்மக்களின் பங்களிப்பு அதிக அளவில் தேவைப்படுகின்றது. இன்று நடக்கும் போர் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் எதிரான போர் இதில் எதிரியை எதிர்த்துநிற்கும்சகலபோராளிகளும் உங்கள் குழந்தைகள் தான்

உங்களின் சொந்தப்பிள்ளை உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் வேளையில் உங்கள் நிலை எவ்வாறு இருக்கும் என சிந்தியுங்கள். உணவின்றி, உறக்கமின்றி உங்கள் பிள்ளையைகாப்பாற்றமுனையும் உணர்வுதான் இன்றைய தமிழ் மகன் ஒவ்வொருவருக்கும் வர வேண்டும். உங்களுக்காகப் போராடும் உங்கள் பிள்ளைகளின் முயற்சி வெற்றியடைய போதிய ஒத்துழைப்புத் தாருங்கள், உதவிகள் புரிய முன் வாருங்கள். [109]


## பிளாஸ்டிக் உபகரணங்கள்

(மானிப்பாய்)

யாழ். குடா நாட்டில் உடைந்த, பழுதடைந்த பிளாஸ்ரிக் உபகரணங்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள மண்ணெண்ணைத் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து, அநேகமான மக்கள், வீதியோரங்களிலும், குப்பைமேடுகளிலும் கிடக்கும் இப்பொருட்களை எடுத்துவந்து இரவு வேளையில் கொளுத்திச் சிறிது நேரமாவது வெளிச்சத்தில் இருப்பதைத் தற்போது காணமுடிகிறது. (71)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**சிவகுரு சாந்தகுமார் [குமார்]**

(சுவிற்சர்லாந்து நாட்டில் அகால மரணமடைந்தவர்)

| அன்னை மடியில்: | ஆண்டவனடியில்: |
|---|---|
| 1966 - 11 - 04 | 1990 - 07 - 22 |

திதி: 1991 - 08 - 10

ஆண்டொன்று ஓடி மறைந்தாலுமுன்
அழகுமுகம் எம் நெஞ்சில் அலைமோதுதையா!
தூண்டா மணி விளக்காய்ச்
சுடர் விட்ட உன் வாழ்வு
மூண்ட பகை யொன்றால்
மூளியாகிப் போனதுவோ!
பெற்ற தாயும் பிரியமுள்ள சோதரரும்
உற்ற நண்பரும், உனதுபெரும் சுற்றமும்
ஆறாத்துயரில் மூழ்கித் துடிக்கின்றார்
மீளாத்துயில் கொள்ளச் சென்றதெங்கே
சொல்லையா?

அன்புச் செல்வமே! சாந்தகுமார்!
உன் ஆத்மா சாந்தியடையத் தினமும்
கண்ணீரால் அர்ச்சிக்கின்றோம்!

அம்மா, சகோதரர்கள், மைத்துனர், மருமக்கள், மாமா, மாமி, சித்தப்பா, சித்தி, பெரியப்பா, பெரியம்மா, சின்னையா, சின்னம்மா, நண்பர்கள், உறவினர்கள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

[சி-5096]

# 31-ம் நாள் நினைவஞ்சலி

**அமரர் வஸ்தியாம்பிள்ளை யோன் தம்பிஐயா**

(ஓய்வுபெற்ற அற்ரெண்டன்,
அரசினர் வைத்தியசாலை, ஊர்காவற்றுறை.)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 04 - 04 - 1932 | 10-06-1991 |

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல யேசுபிரானை தினம், தினம் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி
(தாதி உ. அ. வைத்தியசாலை, ஊர்காவற்றுறை),
பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

பூந்தோட்டம்,
நெல்லியடி,
கரவெட்டி.

[சி–5094]

வடக்குக் கிழக்கில்

# அரச படைகளின் அட்டூழியங்களால் 6 லட்சம் தமிழர்கள் அகதிகளாக உள்ளனர்

(நேற்றைய தொடர்ச்சி)

கால்நடை உணவு, கோழித்தீன் போன்றவை தட்டுப்பாட்டாலும், கால்நடை மற்றும் கோழிவளர்ப்பு 75வீதம் குறைவடைந்துள்ளது. இவற்றை மீட்டெடுக்கப் பல வருடங்களாகலாம்.

1989ம் ஆண்டு இறுதி விபரப்படி 4,50,000 கால்நடைகளும் 650000கோழிகளும் வட பகுதியில் வளர்க்கப்பட்டு வந்தமை கணிக்கப்பட்டுள்ளது. படிப்படியாகவும் மறைமுகமாகவும் ஓசையின்றி பொருளாதார சமூக மற்றும் அரசியல் அழிவுகளை ஏற்படுத்துவதே ஸ்ரீலங்கா பின்பற்றும் அபாயகரமான கொள்கை என்பன இவற்றினூடாக உணரமுடியும்.

## கல்வி

தமிழர் சமுதாயத்தின் பொக்கிசமான கல்வி ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட நடவடிக்கையினால் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது. ஆகஸ்ட் 1990ம் ஆண்டில் நடைபெற வேண்டிய க. பொ. த. (உயர்தர) பரீட்சை நடைபெறவில்லை. ஆனால் அப்பரீட்சையை 1991 ஏப்ரலில் நடாத்த அரசு ஒப்புக் கொண்ட போதும் வேண்டுமென்றே அப் பரீட்சைக் காலங்களில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

டிசம்பர் 1990ல் நடைபெற வேண்டிய க.பொ.த. (சாதாரண) பரீட்சை இன்னமும் நடைபெறவில்லை. இதனால் சகல மாணவர்களுக்கும் 1 வருட பின்னடைவு இன்று வரை ஏற்பட்டுள்ளது. அவர்கள் நிலை பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது.

மேலும் பல பாடசாலைகள் இராணுவ முகாம்களாகப் பாவிக்கப்படுகின்றன. பல நூறு பாடசாலைகள் சேதமாக்கப்பட்டுள்ளன. உதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 212 பாடசாலைகளும், யாழ். மாவட்டத்தில் 79 பாடசாலைகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. மேலும் 5-06-91ல் கிளிநொச்சி மகாவித்தியாலயம் குண்டு வீச்சினால் சேதமாக்கப்பட்டது உயிர்சேதம் இருக்கவில்லை. ஒரு மாணவன் பாரிய காயங்களுக்கு உள்ளானார்.

மேலும் மாணவர்கள், உத்தியோகஸ்தர்கள் உபயோகிக்கும் அப்பியாச கொப்பிகள், பரீட்சை தாள்கள் என்பன இங்குவரத் தடைபோடப் பட்டுள்ளது. பத்திரிகைகளும் வெளிவர முடியாமலும், அச்சுக்கூடங்கள் செயலற்றும் உள்ளன.

## மருந்து விநியோகம்

அரச பயங்கரவாதத்தின் மூலம் தமிழ்மக்களை அடக்க முயலுகின்ற ஸ்ரீலங்கா அரசின் மிகக்கேவலமான நடவடிக்கை வைத்திய சேவைகள் மறுப்பதாகும். சிறு காயங்களுக்கும், சத்திரசிகிச்சைக்கும் தேவையான மருந்துகட்டும் பொருட்களும், உபகரணங்கள் கூட தடைசெய்யப்பட்டுள்ளன.

(1948ன பின் இலங்கையில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் அட்டூழியங்கள். அந்திகளை சுட்டிக்காட்டி யாழ்ப்பாணம் 'கிறிஸ்தவ பொது நிலையினர் முன்னணி' கொழும்பிலுள்ள 22 நாட்டு தூதரங்களுக்கும், சர்வதேசதொண்டர் நிறுவனங்களுக்கும், பரி பாப்பரசரின் பிரதிநிதிக்கும் அனுப்பப்பட்ட மகஜர் தொடர்ச்சியாகத் தரப்படுகிறது.)

மேலும் டிசம்பர் 1990 வரை அரசின் வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்துகள் எதுவும் விநியோகிக்கப்படவில்லை. 1991 ஜனவரிக்குப் பின் சில விநியோகங்கள் அரச வைத்தியசாலை மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள. இதன் காரணமாகவே ஏனைய நிறுவனங்களுக்கு மருந்துப் பொருட்கள் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

## ஊரடங்கு சட்டங்கள்

மக்களின் அன்றாட வாழ்க்கையைக் குழப்பவும், கல்வியையும், உணவுப்பொருட்கள் விநியோகம், பருத்தித்துறை. முல்லைத்தீவு பகுதிகளில் பொருட்கள் கப்பலில் ஏற்றி இறக்குவதைத் தவிர்க்கவும் இடைவிடாது ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட பல சந்தர்ப்பங்களைக் கூட்டுப் படைத் தலைமையகமே அறிந்திருக்கவில்லை என்ற உண்மை எம். எஸ். எவ். விசாரணையின்போது வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

## அரச சார்பற்ற நிறுவனங்கள்

வடக்குக் கிழக்கில் சுமார் 350,000 பேர் அகதிமுகாம்களிலும் 250,000 பேர் அகதிகளாக உறவினர் நண்பர்களுடன் வாழ்ந்துவருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களுடன் வடக்கிலுள்ள 75 வீதமான மக்கள் தமது தொழில்வாய்ப்பை இழந்துள்ளனர். மக்களின் தேவைகளில் ஒரு சிறு பகுதியாவது அரசசார்பற்ற நிறுவனங்கள் நிறைவேற்றி வந்தன. அவை மீதும் ஸ்ரீலங்கா அரசு பலவிதமான நேரடி, மறைமுகத் தடைகளை விதித்துள்ளது. கிழக்கில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கொண்டு செல்வதைக் கண்ட ஆயுதப் படையினர் தடுத்துள்ளனர். பல சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இவற்றைப் பகிரங்கமாகவே முன்பு தெரிவித்துள்ளன. அரசியல் நோக்கத்தோடு அரசியல் சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஆராயவென நியமிக்கப் பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவினரே அரச சார்பற்ற நிறுவனங்கள் வடக்குக்-கிழக்கில் செயல்படுவதை தடுத்துள்ளன. (தொடரும்)

---

# நல்லூர்கந்தசுவாமிகோவில் வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமிகோவில் வருடாந்த உற்சவம் ஆகஸ்ட் 15ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி செப்ரெம்டர் 10ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஆகஸ்ட் 15ம் திகதி வியாழன் கொடியேற்றம், 24ம் திகதி சனி மஞ்சம், 31ம் திகதி சனி கார்த்திகை உற்சவம், செப்ரெம்பர் 3 செவ்வாய் சந்தான கோபாலா உற்சவம், கைலாசவாகனம், 6ம் திகதி வெள்ளி சப்பறம், 7ம் திகதி ரதோற்சவம், 8ம் திகதி ஞாயிறு தீர்த்தம், 9ம் திகதி திங்கள் பூங்காவனமும் நடைபெறவுள்ளது.

---

## புனித மரியன்னை உற்சவம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலய வருடாந்த உற்சவம் கடந்த6ம் திகதிமாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இம்மாதம் 15-ம் திகதிவரை நடைபெறும் மேற்படிஉற்சவத்தில் தினமும் வண.எஸ். மேரி செபஸ்ரியனின் அருளுரையும் திருப்பலியும் நடைபெறும். 14-ம் திகதி நற்கருணை வழிபாடும், 15-ம்திகதி காலையாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் திருநாட் திருப்பலியும் நடைபெறும். [வி]

---

## கடை உடைத்து திருட்டு

[யாழ்ப்பாணம்]

கடைஉடைத்து பொருள்கள் திருடப்பட்ட சம்பவம் ஒன்று நீர்வேலி மத்தியில் கடந்த 5-ம் திகதி இரவு நடைபெற்றுள்ளது.

அரிசி, மா, சீனி, பால் உணவுப் பொருள்கள் மற்றும் இனிப்பு வகைகள் உட்பட சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப் பட்டுள்ளன. நீர்வேலி மத்தியைச் சேர்ந்த திரு. பூபாலன் என்பவருடைய கடையிலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. [க]

---

## பொதிகளில் உணவுப் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்க கிளைகளில் சீனி, மா, அரிசி போன்ற அத்தியாவசியப் பொருள்கள் பொதிகளில் போட்டு பாவனையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இப் பொருள்களை பொதியிடுவதற்கான கூலியை நுகர்வோரிடமிருந்து அறவிடப் படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## 108 பொங்கல்

[யாழ்ப்பாணம்]

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலில் எதிர் வரும் திங்கட்கிழமை 108 பொங்கலும், விசேட அபிஷேகமும் காலை 8 மணிக்கு நடைபெறும். [வி]

---

## தென் மாநில நதிகளை ஒன்றிணைக்கத் திட்டம்

(புதுடில்லி)

தென்மாநிலங்களில் உள்ள நதிகளை ஒன்றிணைக்க அரசு உத்தேசித்துள்ளது.

மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, வைகை ஆகிய நதிகளை ஒன்றிணைக்க இத் திட்டம் வகைசெய்கிறது.

இத் தகவலை மத்திய நீர்வள அமைச்சர் வி. ஸி. சுக்லா நேற்று லோகசபையில் தெரிவித்தார்.

வறட்சி பகுதிகளின் நீர்த் தேவையை நிறைவுசெய்ய இத் திட்டம் உதவிபுரியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காவிரிஆற்று நீரை கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு விடுவது பற்றிய சர்ச்சையை சமாளிக்கும் விதத்திலேயே இத்திட்டம் ஆலோசிக்கப் பட்டு வருவதாக கூறப்படுகிறது. (பூ)

---

## இன்று

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய பங்கின் முதல் குருவாகக் கடந்த 30-ம் திகதி திருநிலைப்படுத்தப் பட்ட அருட்திரு அருளானந்தம் ஜெராலியாவிஸ் அடிகளின் திருப்பலியும், வரவேற்பு விழாவும் மேற்படி ஆலயத்தில் இன்று நடைபெறும். [154]

---

## மக்கள் அஞ்சலி

(நாவற்குழி)

ஆனையிறவில் நடைபெற்ற நேரடி மோதலின்போது வீர மரணத்தை தழுவிக்கொண்ட சாவகச்சேரி-கச்சாய் வீதியைச் சேர்ந்த போராளி இன்பனின் (நடராசா ரஞ்சித்குமார்) புகழுடல் மக்களின் அஞ்சலிக்காக சாவகச்சேரி வட்டப் பொறுப் பாளர் அலுவலகத்திலும். சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்திலும் வைக்கப் பட்டு அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

இறுதியில் மாவீரரின் புகழுடல், பாண்ட் வாத்தியம் முழங்க, கொடிகாமம்மாவீரர் மயானத்திற்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு அங்கு தீயுடன் சங்கமாக்கப்பட்டது. (107)

---

# 'இலட்சியம் நிறைவேறும்வரை தமிழீழ விடுதலைப் போர் தொடர்ந்து நடக்கும்!'

(பண்டத்தரிப்பு)

"எமது போராளிகள் எந்த இலட்சியத்திற்காக ஆயுதம் தூக்கினார்களோ அந்த இலட்சியம் நிறைவேறும் வரை தொடர்ந்து போராடுவார்கள். தமிழீழ விடுதலைப் போர் தொடர்ந்து நடக்கும். தமிழினம் என்று ஓர் இனம் இந்நாட்டில் இருக்கிறதென்பதை அகில உலகுக்கும் எமது விடுதலைப் போராட்டம் பறை சாற்றிக்கொண்டிருக்கிறது."

இவ்வாறு மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல், ஆனையிறவுத் தாக்குதலின்போது வீர மரணம் அடைந்த வேங்கைகளின் புகழுடம்புகள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தபோது அங்கு இரங்கலுரை நிகழ்த்திய விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த திரு தேவர் குறிப்பிட்டார்.

மாதகல் மேற்கைச் சேர்ந்த அருண், புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த பிரதீப், திருகோணமலையைச் சேர்ந்த ஹென்றி ஆகியோரின் புகழுடல்களுக்குப் பெரும் தொகையான மக்கள் திரண்டுவந்து இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

திரு. குகதாசன் மாஸ்டர் தலைமையில் நடைபெற்ற இரங்கலுரை நிகழ்ச்சியின் போது திரு. தேவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"அரச பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கு ஆயுதப் போராட்டமே சிறந்தது. இந் நாட்டில் முதல் தடவையாக 1956ம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து அகிம்சை வழியில் பாராளுமன்றத்திற்கு முன்பாகச் சத்தியாக்கிரகம நடத்தியபோது சிங்களக் காடையர்களினால் தாக்கப்பட்டனர்.

"அதைத் தொடர்ந்து, 1958, 1977, 1983ம் ஆண்டுகளில் அப்பாவித் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப் பட்டனர். தமிழ்ப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டார்கள். உடைமைகள், சொத்துக்கள் சூறையாடப்பட்டன. அரச பயங்கரவாதம் தமிழ் மக்கள் மீது ஏவிவிடப்பட்டதால் தமிழ் இளைஞர் பலர் கொல்லப்பட்டனர். பலர் காணாமற்போய் விட்டனர். இவற்றை எல்லாம் உணராத ஜனாதிபதி பிரேமதாசா, வன் செயல்களைக் கைவிடுமாறு எமக்கு ஆலோசனை கூறுகின்றார்.

"மண் மீட்புக்காகவும், சுதந்திரம் பெறுவதற்காகவும் இன்று ஆயிரக்கணக்கில் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் களத்தில் நின்று, மன உறுதியுடன், தீரமுடன் போராடி வருகின்றனர். களத்தில் வீர மரணமடைந்த மாவீரர்களுக்கு அஞ்சலிசெலுத்தும் அதேவேளையில், அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வதற்குத் தமிழீழ மக்கள் அணிதிரண்டு முன்வர வேண்டியது அவசியம். மறைந்த வீர வேங்கைகள் விட்டுச் சென்ற ஆயுதங்கள் மீண்டும் களத்தில் பயன்படுத்தப்படவேண்டும். தமிழீழப் போராட்டத்தில் ஈடுபட்டு. எமது மண்ணை மீட்க; எதிரியை எமது மண்ணிலிருந்து விரட்டத் தமிழீழ மக்கள் தங்கள் பங்களிப்பை வழங்க வேண்டியது அவசியமானது."

இரங்கலுரை முடிவில் மறைந்த வேங்கைகளின் புகழுடல்கள், பண்டத்தரிப்புப் பிரதான வீதி வழியாக எடுத்துச் செல்லப்பட்டபோது வீடுகள் தோறும், சந்திகள் தோறும் மங்கல விளக்கேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இறுதியில் கோப்பாய் மாவீரர் மயானத்தில் புகழுடல்கள் தீயுடன் சங்கமமாகின. (72)

---

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-30மணிக்கு சங்க தலைவர் இ. சுப்பையா தலைமையில் யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

# நடராஜர் சிலை மீண்டும் தமிழகத்துக்கு கிடைத்தது

(சென்னை)

தமிழ்நாட்டிலிருந்து 1986ம் ஆண்டு கடத்திச்செலலப்பட்ட பிரசித்திபெற்ற நடராஜர்சிலை மீண்டும் நேற்று தமிழ்நாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

இந்தச்சிலை பிரிட்டனுககு கடத்தி செல்லப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டு, இதுதொடர்பாக இதுவரை காலமும் பல்வேறு நீதிமன்றங்களில் நடைபெற்ற வழக்குகளில் வெற்றி பெற்று, நேற்று மீண்டும் தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிடம் இந்த வெண்கலச் சிலை ஒப்படைக்கப்பட்டது. [வி]

## நோயாளர் கவனத்திற்கு

[யாழ்ப்பாணம்]

எதிர்வரும் 13-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்குக் கப்பலில் கொழும்பு செல்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட நோயாளிகளும், அவர்களுடன் கூடச் செல்லும் உறவினர்களும் கப்பலில் செல்வதற்காகத் தங்களுடன் இரண்டு நாட்களுக்குத்தேவையான தண்ணீர், உணவு என்பவற்றுடன் அன்றைய தினம் காலை 6 மணிக்கு போதனு வைத்தியசாலைக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை.

## சீர்உடைத் துணிகளின் விற்பனைக்கான கேள்விப் பத்திரம்

பின்வரும் துணிகளை கொள்வனவு செய்ய விரும்புவோர் பொறியிடப்பட்ட கூறுவிலைகளை 1991-08-17ஆம் திகதி மாலை 2 மணிக்கு அல்லது முன்னதாக நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல்வேண்டும்.

கடிதஉறையின் இடது பக்க மேல்மூலையில் ''சீர் உடைக்கான கூறுவிலைகள்'' என்று இடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரப் படிவம் எதுவும் வழங்கப்படமாட்டாது.

1. 870 மீற்றர் வெள்ளை பொலியஸ்டர் ''சீனரக'' சேட் துணி:
2. 450 மீற்றர் வெள்ளை பொலியஸ்டர் காற்சட்டைத்துணி.
3. 350 மீற்றர் காக்கி பொலியஸ்டர் காற்சட்டைத்துணி;

மேற்படி கூறுவிலைகள் 1991-08-17ஆம் திகதி மாலை 2-30மணிக்கு திறக்கப்படும்: ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 100க்கான காசுக்கட்டளை/ தபாற்கட்டளை அல்லது யாழ்: பல்கலைக்கழக காசாளரிடம் நேரடியாகச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை கூறுவிலைகளுடன் இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். குறிப்பிட்ட துணிகளை 15ஆம், 16ஆம் திகதிகளில் அலுவலக நேரத்தில் நிதிக்கிளையில் பார்வையிடலாம்.

பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,

(எ-1487)


## நிவாரணப் பணியாளரை காணவில்லை

[பாரிஸ்]

பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த மனித உரிமைக்குழுவின் நிவாரணப்பணியாளர் ஜெரோன் லெயிராண்ட் என்பவர் காணாமல் போயுள்ளதாக லெபனான் பொலிஸார் தெரிவித்துள்ளனர். [க]

### ஆனையிறவு மோதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படங்களில் வடபகுதி இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மற்றும் பிரிகேடியர் விஜயவிமலரத்ன ஆகியோர் சம்பந்தப்பட்ட படங்கள் உட்பட பல அம்சங்கள் சிறப்பிடம் பெறுவதாகவும் இவ் வீடியோ படங்கள் வெளிநாட்டு பத்திரிகையாளர்களுக்கும் காண்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### தனியார் கல்வி

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றியத்தின் கருத்தரங்கில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: விடுதலைப்புலிகள் கல்விக்கு எதிரானவர்கள் அல்லர். கல்வி மேல் எங்களுக்கு அக்கறை இருக்கிறது. எமது இயக்கத்தில் பல மாணவர்கள் தான் பல அரிய கண்டுபிடிப்புக்களைச் செய்திருகின்றார்கள்.

இந்த நேரத்தில் இந்த மண்ணுக்காக மரணிக்கும் போராளிகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அவர்கள் உங்கள் சோதரர்கள். உங்கள் பிள்ளைகள் அவர்களது மரண ஓலங்களின் மத்தியில் போர்க்காலச் சூழ்நிலையில் தனியார் கல்வி நிலையங்கள் அந்த நேரத்தில் இயங்கத்தான வேண்டுமா? என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

எமது கல்வி இந்த மண் மீட்புக்காகப் போராடும் மாவீரர்களுக்குத் துணை போகாமல், வெறும் வாழ்க்கைக்கு உதவாத பிழையான கருத்தைப் படிக்கும் புத்தகப் பூச்சிகளாக எமது மாணவர்கள் இருக்க வேண்டுமா என்பதைப் பாருங்கள்.

ஆனபடியால் ஆனையிறவுப் போராட்டத்தில் நீர் அருந்தாது, உணவருந்தாது போராடும் போராளிகளுக்கு பங்களிப்புச்செய்யும் வகையில் தனியார் கல்விநிலையங்கள் இயங்க வேண்டும்'' என்றார். [152]

## விற்பனைக்கு முன்

# புதிய வாகனங்களை பதிவு செய்யவேண்டும்

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படும் மோட்டார் வாகனங்களை பதிவுசெய்யாமல் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டிருக்கிறது.

வாகனங்களை விற்பனைக்காக கொண்டுவரும் விற்பனையாளர்கள் இனிமேல் அந்த வாகனங்களை மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளரிடம் பதிவுசெய்யாமல் அவற்றை விற்பனைசெய்ய முடியாது.

இதுசம்பந்தமாக போக்குவரத்துத்துறை அமைச்சர் அமைச்சரவைக்கு சமர்ப்பித்த ஆலோசனை அமைச்சரவையால் ஆங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### மோதல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

போர் விமானங்களாலும், ஹெலிகொப்டர்களாலும் தாம் இன்னும் விடுதலைப்புலிகளைத்தாக்கி வருவதாகவும், விடுதலைப் புலிகள் உயர்ந்தகட்டிடங்களிலிருந்தும் பதுங்கு குழிகளிலுமிருந்து இராணுவத்தை தாககிவருவதாகவும், விடுதலைப் புலிகள் இராணுவத்தின்மீது மீண்டும் பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்துவதற்கு திட்டமிட்டுவருவதாகவும் அந்த இராணுவ அதிகாரி மேலும் தெரிவித்தார். [வி]

### ஆனையிறவு படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் கடும் தாக்குதல்மூலம் நெருக்கடிகொடுத்து வருகின்றனர்.

ஆனையிறவு முகாமுக்கு உணவு மற்றும் இராணுவ தளபாட விநியோகங்களைத் தடைசெய்வதற்கான கடும் தாக்குதல்களை மேற்கொள்ளவும் விடுதலைப்புலிகள் திட்டமிட்டிருக்கின்றனர்.

இராணுவத்தின் தேவைகளுக்காக விநியோகங்கள் மேற்கொள்ளப்படவிருக்கும்பாதை வழிகளை விடுதலைப் புலிகள் தாக்கத் திட்டமிட்டிருப்பது இராணுவத்தினருக்கு பெரும் பிரச்சினையைக் கொடுத்திருப்பதாகவும் கொழும்பில் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### பாஸ்வழங்கும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வது சம்பந்தமாக மேறபடி பிரிவு மேலும் தெரிவித்திருப்பதாவது:

20-06-91இலிருந்து14-7-91 வரை வடபகுதியிலிருந்து வெளியே செல்வதற்கென வழங்கப்பட்ட தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் 15-08:91 க்கு முன் வட பகுதிக்கு வெளியே செல்வதற்கு பயன்படுத்தப்படுவதற்கு மீள புதுப்பிக்கத் தேவையில்லை.

20-06-91 க்கு முன் வழங்கப்பட்ட வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் மீள புதுப்பிக்கப்படவேண்டும். 20-06-91 இலிருந்து 10-07-91 வரை வடபகுதிக்குள் வந்தவர்கள் மீளவும் வடபகுதிக்கு வெளியே 20-08-91 க்கு முன் செல்வதாயின் அவர்கள் உள்ளே வரும்போது வழங்கப்பட்ட அனுமதி அட்டையை காட்டி அவசர அனுமதி வழங்கும் காரியாலயத்தில் பணத்தைச் செலுத்தி அனுமதிப் பத்திரத்தை பூர்த்தி செய்த பின் உடனடியாக புதுப்பிக்கலாம்.

20-06-91 க்கு முன் வடபகுதிக்குள்ளே வந்தவர்கள் வடபகுதியைவிட்டு வெளியே செல்வதாயின் சாதாரணமாக எல்லோருக்கும்உள்ள நடைமுறையினை பின்பற்றி விண்ணப்பிக்க வேண்டும்.

மண்மீட்பு நிதி செலுத்தியோர் மாத்திரம் செலுத்தியதை உறுதிப்படுத்த பற்றுச்சீட்டின் பிரதியை அல்லது சிற்றூரவையின் சிபார்சுக் கடிதத்தை இணைக்கவேண்டும். மாவீரர். போராளிகள் குடும்பம் தவிர்ந்த ஏனையோர் மண்மீட்புநிதி செலுத்தாவிடின் அதற்குரிய காரணத்தை மண்மீட்பு நிதி தொடர்பகத்தில் மாத்திரமே உறுதிப்படுத்தப்பட்டபின் விண்ணப்பிக்க வேண்டும். (வி)

# காயமடைந்த படையினரை ஜனாதிபதி பார்வையிட்டார்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இராணுவ நடவடிக்கைகளின்போது காயமடைந்து பனாகொடை இராணுவ ஆஸ்பத்திரியில் கிகிச்சை பெற்றுவரும் ராணுவத்தினரை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேரில்சென்று பார்வையிட்டார்.

பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்கா, ராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க ஆகியோரும் ஜனாதிபதியுடன் சென்றிருந்தனர்.

# 3-ம் தர அதிபர்களாக பதவி உயர்த்தப்பட்டோர் விபரம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தில் தரம்-3 அதிபர்களாகப் பதவி உயர்த்தப்பட்டவர்கள் வருமாறு: ஏ. அரவிந்தநாதன் (யாழ். இந்து], ஏ ராசேந்திரன் (கரவெட்டி ஞானசாரியார்). எஸ். நற்குணலிங்கம் [கரணவாய் ம. வி.), ப. சிவசிதம்பரம் (ஹாட்லி), ஏ. பாலகிருஷ்ணன் (காரைநகர் தியாகராஜா ம. வி.), எஸ். வல்லிபுரம் (கரவெட்டி ஞானசாரியார்), எஸ் மாணிக்கவாசகர் [இடைக்காடு ம. வி.), திருமதி வேதநாதன் (கொக்குவில் இந்து].

கே. சந்திரசேகரம் (அராலி இந்து), எம் ஜெயக்குமார் (அராலி இந்து), வி. ஏரம்பமூர்த்தி (அச்செழு சிவப்பிரகாச ம வி.), பி. தேவராஜா (கோப்பாய் கிருஸ்தவக் கல்லூரி)

திருமதி ஆர். மாணிக்கம் (அச்சுவேலி சரஸ்வதி), கே. சுந்தரலிங்கம் (சுதுமலை-வடக்கு ரி. எம். வி.), எஸ். பொன்னம்பலம் (வலந்தலை வடக்கு ஏ எம். ரி. எம்.)

ஆர். சிவபாலசேகரம் (கொக்குவுல் இந்து), எஸ். சிவகுமாரன் (குப்பிளான் விக்னேஸ்வரா(, ரி ராசேந்திரன் (ஆழியவளை சி. சி. ரி எம். வி.), ஜே. ஜேசுதாசன் (சென். ரேக் யாழ்), எம். செலலையா [சென். மேரீஸ். யாழ் ]. பி. ஞானசேகரலிங்கம்(எழாலை தெற்கு ஏ. எம். ரி. எம்.) திருமதி கே. சுப்பிரமணியம் [நடேஸ்வரா கனிஷ்ட)' எஸ். சிவானந்தராசா (இணுவில் சைவப்பிரகாச), எஸ். விநாயகமூர்த்தி (நீர்வேலி சி. சி. ரி. எம். எஸ்), திருமதி என். எச். வில்லியம்ஸ்(நல்லூர் சென் பெனடிக்ஸ்), கே. ஜெயானந்தன் கோண்டாவில் இந்து]. கே. செல்வகுமாரன்[இராமநாதன் கல்லூரி மருதனார்மடம்], எம். சின்னையா [ஸ்ரான்லி] [152]

### 42,000

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் அரசுக்கு இவ்வாறு ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வரிக்கான வருமானத் தொகையை 17,000 ரூபாவிலிருந்து 42,000 ரூபாவாக அதிகரிப்பதன்மூலம் அநேகர் இந்த வரிவிதிப்பிலிருந்து நிவாரணம் பெறமுடியும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

### இனப்பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடாத்தியுள்ளார்.

சபாநாயகர் எம். எச்.முகம்மது தலைமையில் தெரிவுக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### யாழ்குடாநாட்டில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஞுவமுகாமிலிருந்து ஸ்ரீலங்கா துருப்புகள் யாழ். குடாவை நோக்கி முன்னேறக் கூடும் என்ற எதிர்பார்ப்பில் புலிகள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது.

### சட்டவிரோத

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

டப்பட்டு 5,000 வைன் ஸ்பிரிற் போத்தல்கள், மூடிகள், லேபல்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மேற்படி தொழிற்சாலை நாவல கோல்டன்குணசேகரா மாவத்தையில் இயங்கிவந்ததாகவும் இவ்விடயம் தொடர்பாக கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வெலிக்கடை பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின்போதே மேற்படி பொருட்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் இது தொடர்பாக ஒரு வர்த்தகரும் கைதுசெய்யப்பட்டுள்ள தாகவும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சீனிக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப்பொருட்களின் விநியோகஸ்தர்கள் என்ற போர்வையில் மேற்படி தொழிற்சாலை இயக்கப்பட்டுவந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க)

### 6 படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லைப்புலிகளுக்குமிடையே மூண்ட கடும் யுத்தத்தில் 6 படையினர் கொல்லப்பட்டதாகவும் 52 படையினர் படுகாயமடைந்ததாகவும் இராணுவ பேச்சாளர் நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

### இராணுவம்

1-ம பக்கத் தொடர்ச்சி)

பிரமுகர் ஒருவர் நேற்று லண்டன் பி. பி. ஸி. க்கு தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்: ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் தெற்குப் பகுதியைநோக்கி ஒருமைல் முன்னேறியுள்ளதான கூற்றை முற்றாக மறுத்ததுடன் ஆனையிறவு இராணுவத்தினருக்கு வடமேற்கு கரையோரப் பகுதியால் வரும் விநியோகங்களை துண்டிப்பதற்கு தாம் தற்போது நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இப்பகுதியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கடும்மோதலில் 20க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். (வி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் இதாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/18...